விலை சதம் 10.

தொலை பேசி 23411

# சுதந்திரன்
SUTANTIRAN

வ- ஆ. 2001. வைகாசி 15உ வெள்ளி (29-5-70) ற. அவ்வல் பிறை 22 — புத்தகம் 24 இதழ் 50

## மாவிட்டபுரம் குருக்களுக்கு தினபதியார் கடிதம் எழுதுவதாக ஒரு கற்பனை—

மகா பிரம்மஸ்ரீ எஸ். டி. சன்முகநாதக்குருக்கள் திருச் சமுகத்துக்கு ......

ஐயா,

என்ன செய்யலாம்—வருந்தாதீர்கள்.. மாவிட்டபுரக் கந்தன் திரு செல்வநாயகம் அவர்களைத் தானே ஆதரித்திருக்கிறுன். நீங்களும்தான் அன்ருடம் மாவிட்டபுரத்

(3ம் பக்கம் பார்க்க)

## கவிஞரின் சாபம் பலித்தது!

பொன்னம்பலம் மீது கவிஞர் செல்வா தாசன் பிடிசாபம் போட்டு உணர்ச்சிமயமான கவிதையொன்றை இம்மாதம் 25ந் திகதி சுதந்திரனில் எழுதியிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

கவிஞரின் சாபம் பலித்துவிட்டது. பொன்னம்பலம் பொதுத்தேர்தலில் படுதோல்வியடைந்தார் மார்ட்டின் வெற்றி பெற்ருர். ஆம் உண்மைக் கவிஞர்கள் போடும் சாபம் பலிக்காமல் போகாதல்லவா? கடவுள் வாக்கும் கவிஞன் வாக்கும் பொய்க்காது என்பதை நிரூபித்துவிட்டது பொன்னம்பலத்தின் படுதோல்வி!

# தமிழினத்தின் தலைமைப் பொறுப்பு மீண்டும் தமிழரசார் கைகளில்!

## பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தீர்ப்பு!

தமிழரசுக் கட்சிமீதும், அக்கட்சியின் கொள்கைகள் மீதும் தமிழ்பேசும் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையையும் விசுவாசத்தையும் இம்மாதம் 27ந் திகதி நடைபெற்ற பொது தேர்தல் மீண்டும் ஊர்ஜிதப்படுத்துவதாயிருந்தது. தமிழரசுக் கட்சிமீது மாற்றுக் கட்சிகள் திட்டமிட்டு நடத்திய பொய்ப் பிரச்சாரங்களையெல்லாம் தமிழ் மக்கள் நிராகரித்து விட்டு மீண்டும் தங்களை வழி நடத்தும் பொறுப்பை தமிழரசுக் கட்சியிடம் ஒப்படைத்துள்ளனர். கடந்த பாராளுமன்றம் கலைக்கப்பட்ட போது பன்னிரெண்டு பாராளுமன்ற உறுப்பினர் பலத்துடன் விளங்கிய தமிழரசுக் கட்சி இப்போது 13 பா உறுப்பினர்களைக் கொண்ட கட்சியாக விளங்குகிறது. மாவட்ட சபை, தமிழ் பல்கலைக் கழகம் போன்றவற்றை எதிர்த்து வந்த தமிழ் காங்கிரசின் முன்னுள்ள பா. உ. க்கள் மூவரும் தமிழரசுக் கட்சியினுல் தோற்கடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. தனக்கு எதிராக திருப்பி விடப்பட்ட பணபலம், பிரச்சாரப் பலத்தை எதிர்த்து தமிழரசுக் கட்சி 13 இடங்களைக் கைப்பற்றியது ஓர் பெரும் சாதனையென்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

மூன்று தமிழரசு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்திருப்பது ஈழ நாட்டில் இன்னும் தமிழ் உணர்ச்சி சிலரிடமாவது இருக்கவே செய்கிறது என்பதையே காட்டுகிறது.

ஒரு சில தொகுதிகளில் தமிழரசுக்கட்சி தோல்வி

(4ம் பக்கம் பார்க்க)

## புதிதாக முளைத்துள்ள தமிழ்த் துரோகிகள்!

1. சி அருளம்பலம்
2. வீ. ஆனந்தசங்கரி
3. க. தியாகராசா
4. எஸ். யூ. தம்பிராசா
5. கே. டபிள்யூ. தேவநாயகம்

## பொதுத்தேர்தலில் தமிழரசாரால் தோற்கடிக்கப்பட்ட தமிழ்த்துரோகிகள்

1. திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம்
2. திரு. மு. சிவசிதம்பரம்
3. திரு. தா. சிவசிதம்பரம்
4. திரு வி. நவரத்தினம்

## ஒன்பது மந்திரிகள் மண் கவ்வினர்!

சி. பி. டி. சில்லா, ஸாகுலே, எம். எச். மொகமட், மேஜர் மொன்டேகு ஜெயவிக்கிரம, யூ. பி. வன்னிநாயக்கா, எம். டி. பண்டா, பிலிப் குணவர்த்தன, ஐ. எம். ஆர். ஏ. ஈரியகொல்லே, எப். டி. எச். ஜெயவர்த்தன ஆகிய யூ. என். பி. மந்திரிகள் அனைவரும் பொதுத் தேர்தலில் மண் கவ்வியுள்ளனர். திரு. வாளர்கள் வெலகெதற, விமலா கன்னங்கர, அத்தபத்து ஐ. எம். இம்புலான, அசோகா கருணரத்தின, ஷெல்டன் ஜெயசிங்கா ஆகிய அரைமந்திரிகளும் படுதோல்வியடைந்துள்ளனர்.

சபாநாயகர் திரு. ஷேர்லி கொரியாவும், உப சபாநாயகர் திரு. சிவசிதம்பரமும் தோல்வியடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழரசுக் கட்சியை முற்ருக ஒழித்துக் கட்டும் முயற்சியில் இம்முறை தேர்தலில் யு. என். பியின் பெருவாரியான பணம் அள்ளி இறைக்கப்பட்டது. கிழக்கிலங்கையில் யு. என். பி. அரசாங்க திணைக்களங்களைச் சேர்ந்த 'ஜீப்' வண்டிகள் கூட தமிழரசுக்கட்சிக்கு எதிரான பிரசார வேலைகளில் ஈடுபட்டன. யாழ்ப்பாணத்தில் தமிழ்காங்கிரஸ் பல்லாயிரக் கணக்கான ருபாக்களை வீசி எறிந்து யு.என்.பியின் யாழ்ப்பாண ஏஜண்டாக நின்று தமிழரசுக்கட்சியை அழிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டது. காடைத்தனங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. பயமுறுத்தல்கள் இடம் பெற்றன. கூட்டங்கள் குழப்பப்பட்டன. கற்கள் வீசப்பட்டன.

இனத்துரோகிகள் சிலரின் உதவியோடு இத்தனை அட்டகாசங்கள் தமிழ்ப்பகுதிகளில் நிகழ்ந்தும் தமிழ்பேசும் மக்கள் தங்கள் வாக்குகளை தமிழரசுக்கட்சிக்கே பெருவாரியாக அளித்து பதின்

## தமிழ் காங்கிரஸ் ஆனந்தசங்கரி சுதந்திரக் கட்சியில் சேருவாரா?

தமிழ்க் காங்கிரசின் தனிப் பெரும் தலைவரும் அவரது சகாக்களான சிவாக்களும் தமிழரசுக் கட்சியினுல் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய தமிழ்க் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான அருளம்பலம் தியாகராசா ஆனந்தசங்கரி ஆகியோரிடையே பெரிய குழப்பம் ஏற்பட்டிருக்கிறதாம்.

இவர்கள் சேர்ந்து நல்லம பெற இருந்த யு. என். பி. அரசாங்கம் இம்முறை அமைய இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால் 'என்ன செய்யலாம்?' என்று இவர்கள் யோசிக்கிருர்களாம். ''தமிழ்க் காங்கிரஸ் தலைவரே பாராளுமன்றத்தில் இல்லாதபோது தமிழ்க் காங்கிரஸில் இருந்து இனி என்ன புண்ணியம்'' என்று இந்த மூவரில் ஒருவர் தன் நண்பரிடம கூறினுராம். கிளிநொச்சி ஆனந்தசங்கரி சிறீ லங்கா சுதந்திரக் கட்சியில் சேருவார் என்றும் பேசிக்கொள்ளப்படுகிறது.



தமிழினம் நன்றி மறந்து தவறிழைத்தாலும் தமிழரசுக்கட்சித் தொண்டர்கள் தம் இறுதிமூச்சு உள்ளவரை இனத்துக்கும் மொழிக்கும் என்றென்றும் உழைத்துக் கொண்டே இருப்பார்கள் என்று கூறுகிருரா எங்கள் பெரியவர்? தளபதியும் தலைவரும் தோற்றுவிட்டனரேயென்பதை நாட்டுச் செல்வா முகத்தில் ஏதேனும் சலிப்புத் தோன்றுகிறதா? இல்லையே...! உறுதியும் கடமையுணர்வும் அல்லவா மேலோங்குகிறது?

**இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்**

# ஆர். ஜி.யின் செருக்கை அடக்கினார் நேமி!

## தமிழன் கட்சி தமிழரசே! 13 பேர் மாபெரும் வெற்றி!

### தேர்தல் முடிவுகள் கூறும் உண்மை

இலங்கைத் தமிழரசுக் கட்சி பதின்மூன்று தொகுதிகளைக் கைப்பற்றியது. தமிழரசுக் கட்சித்தலைவர் 'தந்தை செல்வா' அவர்கள் கடந்த தேர்தலில் எடுத்த அதே அளவான வாக்குகளைப் பெற்று மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழரசின் வெற்றி சமஷ்டியின், நீதியின், இலட்சியத்தின் வெற்றியாகவே கருதப்படுகிறது. தமிழ் பேசும் மக்கள் இன்னமும் தமிழரசுக் கட்சியையே நம்புகின்றார்கள். அத்துடன் திருமலையிற் பல்கலைக்கழகம், மாவட்ட சபை சமஷ்டிக் கொள்கை என்பனவற்றையும் அவர்கள் பூரணமாக ஆதரிக்கின்றார்கள் என்பது பொதுத்தேர்தலின்படி நிரூபிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத் தொகுதி மக்கள் திரு. மார்டின் அவர்களைத் தெரிவு செய்து தமிழரசுக் கட்சியை முதற்தடவையாக ஏற்றுக்கொண்டுள்ளனர். திருமலையில் திரு ஆர். ஜி. சேனநாயக்கா தமது கட்டுப்பணத்தை திரு. நேமிநாதனிடம் பறிகொடுத்தார்.

தமிழரசுக் கட்சி வெற்றியீட்டிய தொகுதிகளின் விபரங்கள் பின்வருமாறு

காங்கேசன்துறை



| | |
|---|---|
| எஸ். ஜே. வி. செல்வநாயகம் (த.அ.க.) | 13520 |
| வி. பொன்னம்பலம் (க. க) | 8164 |
| சி. சுந்தரலிங்கம் (சு) | 5788 |
| ரி. திருநாவுக்கரசு (த. கா) | 3051 |
| மேலதிகம் | 5356 |

ஊர்காவற்றுறை



| | |
|---|---|
| கா. பொ. இரத்தினம் (த.அ.) | 13703 |
| ...சந்திரவேலு (சு) | 5013 |

என். ரி. சிவஞானம் (த. கா.) 1667


மேலதிகம் 8066

கோப்பாய்



| | |
|---|---|
| எஸ். கதிரவேற்பிள்ளை (த. அ. க.) | 16428 |
| ரி. குணரத்தினம் (த.கா) | 11288 |
| எப். எஸ். கனகசுந்தரம் (சு) | 983 |
| என். துரைராஜா (ஸ்ரீ. ல. சு. க.) | 713 |
| மேலதிகம் | 5140 |

திருகோணமலை



| | |
|---|---|
| பி. நேமிநாதன் (த. அ. க) | 12395 |
| எஸ். எம். ஏ. ஜமாலுதீன் (ஸ்ரீ. ல. சு. க) | 8346 |
| ஆர். நவரத்தினராஜா (ஐ. தே. க) | 5703 |
| ஆர். ஜி. சேனநாயகா (சு) | 601 |
| மேலதிகம் | 4049 |

உடுப்பிட்டி



கே. ஜெயக்கொடி [illegible]

| | |
|---|---|
| எம். சிவசிதம்பரம் (த. கா) | 11662 |
| பி குமாரசாமி (க.க) | 1149 |
| கே பிள்ளையினார் (சு) | 724 |
| ஆர். ஆர். தர்மரத்தினம் (ல. ச. ச. க) | 712 |
| எஸ். சுந்தரம் (சு) | 591 |
| மேலதிகம் | 1256 |

உடுவில்



| | |
|---|---|
| வி. தர்மலிங்கம் (த. அ. க) | 14120 |
| என். சிவனேசன் (த. கா) | 11656 |
| கே. விஜேதன் (சு) | 1362 |
| வி. காராளசிங்கம் (ல.ச.ச.க) | 1264 |
| எம். முதலியார் (சு) | 254 |
| மேலதிகம் | 2464 |

யாழ்ப்பாணம்



| | |
|---|---|
| சி. எக்ஸ். மார்ட்டின் (த. அ. க.) | 8848 |
| ஏ. ரி. துரையப்பா (சு) | 8792 |
| ஜீ. ஜீ. பொன்னம்பலம் (த. கா) | 7222 |
| மேலதிகம் | 56 |

மூதூர்



(இரட்டை அங்கத்தவர்)

ஏ. எல். அப்துல் மஜீத் (ஸ்ரீ. ல. சு. க) 22727

மட்டக்களப்பு



| | |
|---|---|
| ஏ. தங்கத்துரை (த. அ. க.) | 19787 |
| எச். டி. எல். லீலாரத்ன (சு) | 18698 |
| எம். ஈ. எச். எம். அலி (ஐ. தே. க.) | 15018 |
| பி. ஜி. சிறிசேன (சு) | 753 |
| மேலதிகம் 1 | 2940 |
| மேலதிகம் 2 | 1089 |

சாவகச்சேரி



| | |
|---|---|
| வி. என். நவரத்தினம் (த. அ. க.) | 15473 |
| வி. குமாரசாமி (த. கா) | 12921 |
| மேலதிகம் | 2552 |

பருத்தித்துறை



| | |
|---|---|
| கே. துரைரத்தினம் (த. அ. க) | 9217 |
| என். நடராசா (த. கா) | 8902 |
| பி. கனகராசா (சு) | 579 |
| ஏ. விசாகரத்தினம் (சு) | 305 |
| மேலதிகம் | 315 |

வவுனியா



| | |
|---|---|
| எக்ஸ். எம். செல்லத்தம்பு (த. அ. க.) | 10947 |
| ரி. சிவசிதம்பரம் (த. கா) | 10674 |
| எஸ். பத்மநாதன் (க. க.) | 3120 |
| எக்ஸ். எம். கே. சுபசிங்கா (சு) | 584 |
| ஏ. டி. ஏ. செனிவிரத்ன (சு) | 137 |
| மேலதிகம் | 273 |

| | |
|---|---|
| செ. இராசதுரை (த. அ. க) | 27661 |
| பி. ஆர். செல்வநாயகம் | 23082 |
| ஏ. எச். மாக்கான் மாக்கார் | 17015 |
| எஸ். ஜே. அரசரத்தினம் | 624 |
| எம். ஏ. சி. அப்துல் ரகுமான் | 14805 |
| ரி. பிரான்சிஸ் சேவியர் | 196 |
| மேலதிக வாக்குகள் | 4571 |

மன்னார்



| | |
|---|---|
| வி. ஏ. அழகக்கோன் (த. அ. க) | 10697 |
| எஸ். ஏ. றஹீம் (ஐ. தே. க) | 10628 |
| என். எர். அப்துல் சாதர் (ஸ்ரீ. ல. சு. க) | 513 |
| மேலதிகம் | 69 |

## யு. என். பி.க்கு தமிழரசுக்கட்சி கற்பித்த பாடம்!

தந்தை செல்வாவுக்கு 'மாவட்ட சபை தருவேன்' என்று தந்த வாக்கைக் காற்றிலே பறக்கவிட்டு அரசியல் அறம் பிழைத்தார் டட்லி சேனநாயக்கா. அவரது யூ. என். பி. கட்சி இம்முறை படுதோல்வியடைந்தது. செல்வாவின் வேதனைப் பெருமூச்சே யு. என். பியை குழிதோண்டிப் புதைத்தது.

தமிழரசுக் கட்சி இம்முறை தேர்தலில் யு. என். பியைப் பகிரங்கமாகச் சாடியது தெரிந்ததே. மலையகத் தமிழர்களும் திருமலைத் தமிழர்களும் கொழும்பு சார்ந்த தமிழ்ப் பகுதிபுத்தளம் சிலாபம் பகுதித் தமிழர்களும் தமிழரசுக் கட்சியோடு சேர்ந்து ஒத்துழைத்து இம்முறை யு. என். பியை முழுமையாக அழிந்து போகச் செய்தார்கள்.

எங்களை எள்ளி நகையாடி 'மாவட்ட சபை'யை மறுத்த யு. என். பியின் தேர்தல் முடிவு நிலை என்ன? எங்கள் தேர்தல் முடிவு நிலை என்ன?

யு. என். பி. போட்டியிட்ட தொகுதிகள்:— 135

யு. என், பி. வென்ற தொகுதிகள்:— 16

தமிழரசு போட்டியிட்ட தொகுதிகள்:— 19

தமிழரசு வென்ற தொகுதிகள்:— 13

வெற்றி யாருக்கு பார்த்தீர்களா?

# 'என்ன செய்தோம்' என்பதை எண்ணிப்பார்க்கும் நேரம் இது

## ஆட்சிப் பொறுப்பேற்ற பின் ஆற்றிய பணிகள் பற்றிக் கணக்கெடுப்போம்

### சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு பிறந்த நாள் விழாவில் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி தெளிவுரை

சென்னை, மே 18

நாம் ஆளுங் கட்சியாகப் பொறுப்பேற்று கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் முடிந்து விட்டன - இன்னும் இடையிலிருப்பது ஓராண்டு காலம்! இந்தக் காலத்தில் கழகத் தொண்டர்கள், சொற்பொழிவாளர்கள், கழகத் தலைவர்கள், அமைச்சர்கள் அனைவரும்- அவரவர்களும், 'நாம் என்ன செய்தோம்' என்று கணக்குப் பார்த்திட வேண்டும்!

ஆட்சிக்கு வந்ததும் மதமதப்பு வரும் - பளபளப்புத் தோன்றும்; அந்த மதமதப்பில்—பளபளப்பில் ஆசை இருக்குமானால் வீழ்ச்சி ஏற்படும் என்பது சரித்திரம் காட்டும் உண்மையாகும்!

மாற்றாரைப் பற்றிப் பேசும் நேரமல்ல இது—நம்மை நாமே பார்த்துக்கொள்ளவேண்டிய நேரமாகும்!

ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றரை ஆண்டுக் காலத்தில், நாம் ஆற்றியுள்ள பணிகளைப் பற்றிக் கணக்கெடுப்போம்! நிறை உழைப்பு எனில்—மன நிறைவு கொள்வோம்! குறை உழைப்பு எனில், திருத்திக் கொள்ள முயற்சிப்போம்.

இவ்வாறு கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் திருவல்லிக்கேணி கடற்கரையிலுள்ள சீரணி அரங்கில் நடைபெற்ற சிந்தனை சிற்பி சி. பி. சிற்றரசு அவர்களின் 64-வது பிறந்த நாள் விழா பாராட்டுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக் காட்டித் தெரிவித்தார்.

தமிழக மேலவைத் தலைவர் சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு அவர்களின் 64வது பிறந்த நாள் விழா திருவல்லிக்கேணி கடற்கரையிலுள்ள சீரணி அரங்கில் நேற்றுமாலை கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கலைஞர் கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:—

"பெரியார் அவர்களின் பாசறையில் அண்ணன் சி பி சிற்றரசு அவர்கள் ஒரு போர் வாள்! பெரியார் அவர்கள், அவருடைய மாடி வீட்டிலிருந்து பயிற்சி பெற்ற மாணவர்களாகிய எங்களை யெல்லாம் கண்டிக்கின்ற நேரத்தில்... என்னைக் கண்டிக்கின்ற விதம் ஒரு விதமாகவும், அண்ணா அவர்களைக் கண்டிக்கின்ற விதம் வேறுவிதமாகவும், சி. பி. சி. அவர்களைக் கண்டிக்கின்ற விதம் இன்னொரு விதமாகவும் இருக்கும்; சிலரிடம் சிறிது சீறி விழுவார்; சிலரிடம் கொஞ்சம் சிரித்தவாறு கண்டிப்பார்! அப்படி யெல்லாம் பெரியாரிடம் பயிற்சி பெற்றவர்கள் நாங்கள்!

#### பேச்சாற்றல் மிக்கவா

அண்ணா அவர்கள், நாங்கள் பேசும் போதெல்லாம் தமது உணர்ச்சிகளை வெளிக்குக் காட்ட மாட்டார்கள்: நான் ஆவேசமாகப் பேசுவதாக வைத்துக் கொள்வோம் ... அதற்கு, 'ஆகா' போடமாட்டார்; எதையும் வெளிப்படையாக...உடனடியாகக் கூருமல் மனத்திலே வைத்துக் கொண்டு, பேசி முடித்தபின், 'கருணாநிதி... இன்னின்ன பேசினயே-அது நன்ருக இருந்தது; இப்படிப் பட்டதை நாசூக்காகச் சொல்லியிருக்க வேண்டும் என்பார்.

ஆனல், ஒருவர் பேச்சுக்கு மட்டுமே உணர்ச்சிகளை வெளிக்குக் காட்டுவார் — விழுந்து விழுந்து சிரிப்பார் என்ருல், அது, அண்ணன் சி. பி



சி. அவர்கள் பேச்சைக் கேட்டுத்தான்! அப்படிப் பட்ட பேச்சாற்றல் மிக்கவர் அண்ணன் சி. பி. சி. அவர்கள்.

#### அண்ணா சித்தாந்தம் கழகத்தின் கொள்கை

தமிழகச் சட்டமன்ற மேலவையில்தாக்கல்செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கையில், சில பொருட்களுக்கு வரி விதித்திருக்கிருேம்; தாங்கக்கூடியவர்க்கு வரி விதிப்பதும்—தாங்க முடியாதவர்களின் மீது வரியிலலாத நிலையையும் உருவாக்குவது தான் பேரறிஞர் அண்ணா அவர்களின் சநதாந்தமும கழகத்தின் கொள்கையுமாகும்.

#### குறை கூறியவர் திகைத்து விட்டார்

ரேடியோவின மீதானவரி உயர்த்தப்பட்டது; இது பற்றி மேலவையில் பேசிய காங்கிரசு நண்பரொருவர் ஆத்திரமாகப் பேசினர்—'ரேடியோமீது வரி விதிக்கப் பட்டிருக்கிறது; அந்த வரி ஏழையைப் பாதிக்காது என்கிறீர்கள்; கிராமங்களிலே இருக்கின்ற ஏழைகள, ரேடியோக்களை வாங்க வேண்டாமா?' என்று கேட்டார்.

உடனே சி. பி. சி. அவர்கள் எழுந்து, 'எந்த ஏழை ரேடியோவை வாங்குகிருன்? உப்பு புளி, மிளகாயைப் போல் தினமும் வாங்குவதா ரேடியோ? — எப்போதோ வாங்குவதுதான்; ஆகவே போடப்பட்டிருக்கின்ற வரி, ஏழைகளைப் பாதிக்காது' என்ருர்.

சடக்கென்று பதிலைத் தேடிப் பிடித்துச் சுளீரென்று அவர் கேட்டதும், பேசிய உறுப்பினர் சிறிது நேரம் திகைத்துப் போய் விட்ட இடத்திலேயிருந்து கூட பேசாமல் வேறு பிரச்சினையைப்பேச ஆரம்பித்தார்.

#### உள்ளத்து உணர்ச்சிகளுக்கு வார்த்தை வடிவம்

அந்த அளவுக்கு உள்ளத்து உணர்ச்சிகளுக்கு வார்த்தை வடிவம் தந்து அதிலே நகைச்சுவை கலந்து நறுக்குத் தெரிந்தால்போல்-உள்ளத்தைத் தரித்கத்தக்க விதத்தில் பேசக் கூடிய ஆடிய ஆற்றல் பெற்றவர்!

நாற்பது, நாற்பத்தைந்து ஆண்டுகளாக மக்களுக்கு விழிப்பு உணர்ச்சியை ஊட்டியவர்களின் வரிசையில்சி. பி. சி. அவர்கள் முன்னணியில் இருக்கிருர்கள்.

#### உழைப்புக்குச் சலியாதவர்கள்

92 வயது முடிந்து 93-வது வயதிலிருக்கும் பெரியார் அவர்களை விட சி. பி. சி. அவர்கள் இளையவராக இருந்தாலும், 'தளர்ச்சியோடு இருக்கின்ருர்' என்ருல், ஓயாது உழைப்பது தான்! உழைப்பதில் பெரியாரும் சளைத்தவரல்லர்; என்ருலும், அண்ணன் சி. பி. சி. அவர்களின் உடல் தளர்ச்சிக்குக் காரணம், வாழ்க்கையிலுள்ள பல்வேறு தொல்லைகளையும்—அவற்றை ஏற்றுக்கொண்டு சமாளித்துப் பொது வாழ்க்கையிலே ஈடுபட்ட காரணத்தாலும் திடகாத்திரத்தை இழந்திருக்கிருர்.

அவருக்குள்ள திடகாத்திரம் நீடிக்க வேண்டும் என்பதாலும், எங்களைப்போன்று பொறுப்பில் இருந்தால் திடகாத்திரம் போய்விடும் என்றெண்ணியதாலும், 'நம் நிலையிலேயே அவரை வைத்துவிடக்கூடாது—நமக்கும் மேலே அவரை வைக்க வேண்டும்—அவர் வந்தால் நாமெல்லாம எழுந்திருக்க வேண்டும் என்ற நிலை இருக்க வேண்டும்' என்று எண்ணித்தான் அவரை மேலவைத் தலைவராக்கி இருக்கிருேம்.

64 வயதுள்ள அவர் 74 வயதாகி —84 வயதாகி— 94 வயதாகி —104வது ஆண்டுவிழாவையும் கொண்டாட வேண்டும்; அந்த விழாவில் பெரியார் வாழ்த்துரை வழங்க வர வேண்டும்.

அண்ணன் சி. பி. சி. அவர்கள் உழைத்த உழைப்

(4-ம் பக்கம் பார்க்க)

---

## பொங்கு தமிழுக்கு இன்னல் விளைந்தால்!

பொங்கு தமிழுக் கின்னல் விளைந்தால்
பொழுது மறைந்து போனதை ஒக்கும்
எங்கு மிருளைக் கனைந்தே யிலங்கி
எண்ணத் திலொளி ஏற்ற வேண்டும்
தங்கிடற் கரிய தன்னல மின்மை
தமிழுக் கேயுயிர் தந்திடும் வன்மை
மங்கி டாத்தமிழ் மகன்துய ருற்ருல்
மனந்து ணிந்திடின் மாண்பு வந்திடும்!

தமிழ ரும்மவர் தம்பண் பாடும்
தரணியில் நலிந்து தரைமட் டமாகும்
அமிழ்தி னும்மினி தாகிய நாம்மொழி
ஆற்று நீரின் எதிரே நீந்தியும்
இமிழ்திரை யுலகில் நெருப்பில் நீருய்
என்றும் மாருதி ருந்ததும் இன்ருே
அமிழ்ந்தது துயரில் அவள்துயர் துடைக்க
அன்புத் தமிழா பொங்கி எழுவாய்!

அடிமை விலங்கை அறுத்தே யெறிந்து
ஆண்மை கொண்டு ஆர்த் தெழுந்து
துடித்துத் தோழ்கள் தினவே எடுக்க
தூண்டித் தமிழர் துயரம் துடைத்து
மிடிகள் யாவும் மின்னல் போன்றே
வீழ வெற்றி முரசம் கொட்டி
ஒடிந்த வாழ்வில் உயரச் செய்ய
ஒத்தே நின்று ஓளிரச் செய்வோம்!

வான்புகழ் வள்ளுவன் ஆக்கித் தந்த
வளமார் திருக்குறள் வாடி நிற்கும்
ஆன்மாவை உருக்கும் ஆரச் சிலம்பும்
அரியதேன் சொட்டும் திருவா சகமும்
ஊன்றிய கலித்தொகை யுந்தமி ழுக்கே
உரித்தாம் அகமும்; புறமும்; பத்தும்
போன்ற இலக்கியம் யாவும் போகும்
பொங்கு தமிழுக் கின்னல் விளைந்தால்!

பொங்கு தமிழா எம்மைப் பெற்ற
பொற்ருய் தனினை பூக்கர மதனில்
எங்கு மன்னிய எழிலை காண்பாய்
என்றும் இளமை இலங்கும் அவட்கே
பங்கம் விளைத்தால் புலியாப் பாய்வாய்
பாறைக் கல்லையோ விலக்கித் தாண்டி
பொங்கி எழுந்து போர்தொடுப் பாய்நீ
பொழுதும் அவட்கே உயிர் தமிழா!

பொறுமை கொண்டே இருப்பான் பழியை
பொறுக்க மாட்டான் பொங்கி இன்னல்
அறுத்தே யெறிவான் அழகுற வேதமிழ்
ஆக்கத் துடிப்பான் தடைக ளேதும்
உறுத்து மென்ருல் உயிரை, உடலை
உவந்தே தமிழுக் கீவான் கொடுமை
பொறுக்கா துலகை வெறுத்தே விடுவான்
பொங்கு தமிழுக் கின்னல் விளைந்தால்!

தமிழ னென்னும் தகைமை எண்ணம்
தரணி எங்கும் தழைக்க வேண்டும்
தமிழ ஞுல் தமிழைக் காக்க
தக்க தான திறமை வேண்டும்
அமிழ்தி லினியள் தமிழா மவளை
அன்பில் பூத்த அகிலத் தாயின்
துயரை அகற்றித் துயரைத் துடைப்போம்
தோள்கள் தட்டித் துணிந்து நிற்போம்!

பொங்கு தமிழுக் கின்னல் விளைந்தால்
பொறுமையை மீறும் உறுதி வேண்டும்
எங்கள் வீரம் இதுவே யென்று
எவரும் எண்ணி எதிரே எம்முன்
தங்கி நிற்கும் தடைகள் வீழ்த்தி
சாடிச் செல்வோம் இன்னல் என்னும்
கங்குல் போகும் விடிவாம் கதிரும்
கண்ணிற தெரியும் கவலை ஒழியும்!

—'நவாலியூர்க் கவிராயர்'

(26-2-1968ல் காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றத்தினரால் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் மூன்ரும் பரிசுபெற்ற கவிதை இது.)

---

## சுதந்திரக் கட்சி கூட்டணி வெற்றியின் ரகசியம் என்ன?

நடைபெற்ற பொதுத்தேர்தலில்—சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலான கூட்டணி மிக அதிகப்படியான பெரும் பான்மையுடன் வெற்றி பெற்றதற்கு காரணம் தமிழ் மக்கள் யூ. என். பி. மீது கொண்ட வெறுப்பின் பிரதிபலிப்புத்தான் என்றும், யூ. என். பி. மீதுகொண்ட வெறுப்பினுல் தமிழ்மக்கள் சுதந்திரக்கட்சி வேட்பாளர்களைப் ஆதரித்து வாக்களித்திருக்கலாம் என்றும் அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது

1965ம் ஆண்டு யூ.என்.பி. தமிழரசுக்கட்சியுடன் தான் செய்துகொண்ட ஒப்பந்தங்களை புறக்கணித்துவிட்டு தான்தோன்றித்தனமாக நடக்க முற்பட்டதால் தமிழ் மக்கள் யூ. என். பி. மீது வெறுப்பும் ஆத்திரமும் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக தென்னிலங்கையிலுள்ள தமிழ் மக்கள் யூ. என். பி.க்கு எதிராக தங்கள் வாக்குரிமையைப் பிரயோகம் செய்துள்ளனர் என்றும் இதனுல்தான் சுதந்திரக்கட்சிக் கூட்டணி எதிர்பாராத அளவு பெரும்பான்மையைப் பெற முடிந்ததென்றும் அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

---

மாவிட்டபுரம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தானுக்கு பூசை செய்கிறீர்கள்...ஆனுல் என்ன புண்ணியம்...கந்தனுக்கு திரு. செல்வநாயகத்தை ஏதோ பிடித்த காரணத்தாலே தானே அவருக்கு வெற்றி தேடிக் கொடுத்திருக்கிருன்...ஐயா...இனிமேல் திரு செல்வநாயகத்தை எதிர்த்து ஒன்றும் பேசாதீர்கள். கந்தன் அப்புறம் உங்களுக்கு எதிராக ஏதாவது செய்தாலும் செய்து விடுவான் தெரியுதா? ஜாக்கிரதை!

அன்புள்ள,
—தினபதியார்.

தலைமை தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

பாராளுமன்றத்துக்கு போனாலென்ன; போகாவிட்டாலென்ன....!

# என் கண்ணீரும் இரத்தமும் வியர்வையும் ஈழத்தமிழினத்துக்கே காணிக்கையாக்குவேன்!

## தளபதி அமிர்தலிங்கத்தின் நெஞ்சை உருக்கும் உறுதிமொழி!

(நமதுநிருபர்)

'தாய் குழந்தைக்குச் சோறூட்டும் போது, சோறு கொடுக்கும் அன்னையின் கையை சில வேளைகளில் குழந்தை தட்டி விடும். குழந்தை தன்னைத் தள்ளி விட்டது என்பதற்காக தாய் குழந்தைக்கு தொடர்ந்து சோறூட்டுவதை நிறுத்துவாளா? தமிழ் மக்கள் என் தொகுதியில் என்னைத் தள்ளி விட்டார்கள் என்பது உண்மையே! ஆனால் அதற்காக எனது ஈழத்தமிழினத்துக்கு தொண்டாற்றுவதை நான் நிறுத்திவிட முடியுமா?'

தமிழர் தளபதி அமிர்தலிங்கம் அவர்கள் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் 'சுதந்திரன்' நிருபருக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றின் போது இவ்வாறு குறிப்பிட்டார். வழக்கமான அந்த இனிய சிரிப்பு முகத்தில் தவழ அவர் இவ்வாறு கூறினார். அமிர்தலிங்கம் அவர்கள் தொடர்ந்து கூறியதாவது:—

'இம்முறை தேர்தல் முடிவுகள் ஈழத்தில் தமிழினத்துக்கு சிறிது ஆபத்தான முடிவுகளாகவே வெளிவந்திருக்கின்றன. நான் எனது தொகுதி தேர்தல் முடிவு பற்றியோ எனது கட்சியின் தேர்தல் முடிவுகள் பற்றியோ இங்கு கூறவில்லை. தென் பகுதிகளில் நிகழ்ந்துள்ள முடிவுகள் பற்றியே கூறுகிறேன். தனிப்பலத்தோடு சிறீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற்றிருப்பது அவ்வளவு நல்ல அறிகுறியாகத் தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரை நாடாளுமன்றத்துக்கு வெளியே நானும், டாக்டரும், எங்கள் தலைவரும் இறைவனால் ஏதோ ஒரு காரணத்தோடுதான் நிறுத்தப்பட்டிருக்கிறோம் என்றே கருதுகிறேன். நாடாளுமன்றத்துக்கு வெளியே இம்முறை நமிழரசுக் கட்சிக்கு நிறைய வேலை இருக்கும் போலவே தோன்றுகிறது.

'நான் என்னுடைய வாழ்வில் ஒரு பகுதியை எனக்கென்றும் இன்னொரு பகுதியை தமிழினத்துக்கென்றும் வைத்திருப்பவனல்ல. கொள்கைவாதி அவனுடைய வாழ்வை பங்குகள் போடமாட்டான். ஒவ்வொரு நிமிடமும் தமிழினத்துக்காகவே நான் சீவிக்கிறேன். நாடாளுமன்றத்தில் நாற்காலி கிடைக்கவில்லையென்றால் போய் வீட்டில் ஐந்து ஆண்டுகள் கட்டில் வாசம் செய்கிறவர்கள் நாட்டில் இருக்கிறார்கள். நான் அந்தச் சாதியைச் சேர்ந்தவனல்ல. உறங்கும்போதும் தமிழினத்தின் நல்வாழ்வு பற்றியே கனவு காண்கிறவன் நான், தொடர்ந்து உழைப்பேன். என் கண்ணீரும் இரத்தமும வியர்வையும் ஈழத் தமிழினத்துக்கு காணிக்கை தந்தே மடிவேன்!''

இவ்வாறு தளபதி அமிர்தலிங்கம் அவர்கள் நமது நிருபரிடம் உணர்ச்சியோடு கூறினார்.

## தமிழினத்தின் தலைமைப் பொறுப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டாலும் அத்தொகுதிகளில் தமிழ்பேசும் இனத்தின் ஒற்றுமைக்காக குரல் கொடுத்து நின்ற இலட்சிய வெறி ஒன்றின் காரணமாகவே அது தோல்வி கண்டது!

கல்குடாவிலும் பட்டிருப்பிலும் ''யாழ்ப்பாணத்தான் - மட்டக்களப்பான்'' பிரிவினையை எதிர்த்து நின்ற புனித இலட்சியப் பணியின் காரணமாக தமிழரசுக்கட்சி துரோகிகள் இருவரிடம் தோல்விகண்டது.

'காரைதீவான்' என்ற உள்ளூர்ப் பிரிவினையைக் கிளப்பி தமிழினத்தைக் கூறு போடும் கொடியவர்களுக்குப் பலியாகி வட்டுக்கோட்டையில் தோல்வி கண்டது. இந்து - கிறிஸ்தவன் பேதத்தைக் கிளப்பி விடும் இழியோர் சிலரின் சூழ்ச்சியின் விளைவாக நல்லூரில் அது தோல்வியடைந்தது சாதி பேதத்தைத் தூண்டி விடும் சதிகாரருக்குப் பலியாகி கிளிநொச்சியில் கட்சி தோல்வியுற்றது.

சுருக்கமாகச் சொல்வதானால் தமிழினத்தைப் பிரித்துக்கொடுக்கும் கயவர்களுக்கு ஒத்துழைக்காத ஒரே காரணத்தாலேயே அது தோற்றது! கொள்கையில் ஒருவன் உறுதியாக நின்று அக்கொள்கைக்காக அவனுக்கு வர இருக்கும் சொந்த நலன் ஒன்றை இழப்பது தியாகம் என்றால் இந்த நான்கு தொகுதிகளையும் தோற்றது தமிழரசுக் கட்சி வேட்பாளர்களைப் பொறுத்த வரை தோல்வி அல்ல தியாகம் என்றே கருத வேண்டும்.

இரு தொகுதிகளில் மக்கள் தமிழரசுக் கட்சிக்கு துரோகம் இழைத்துச் செல்வோருக்குத் தகுந்த பாடம் படிப்பித்திருக்கிறார்கள். போன தேர்தலில் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட மூதூர் முகம்மது அலி பாதியில் தமிழரசுகட்சிக்குத் துரோகமிழைத்துவிட்டு வெளியேறி யூ என்.பியில் சேர்ந்தார். அதே போன்று ஊர்காவற்றுறையில் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட வி. நவரெத்தினமும் தமிழரசை மறந்து வெளியேறி சுய நல வெறியோடு புதுக்கட்சி துவங்கினார். தமிழரசுக்கட்சி ஒன்றுதான் ஈழத் தமிழரின் விடுதலை இயக்கம் என்பதிலும் தமிழரசுக்கட்சி உறுதிமிக்க ஒரு கட்டுப்பாடான இயக்கமாக இருக்கவேண்டும் என்பதிலும் நம்பிக்கை மிக்க தமிழ்மக்கள் இவ்விரு தொகுதிகளிலும் இம்முறை போட்டியிட வந்த அதே இரு துரோகப் பிறவிகளுக்கும் அவர்களைத் தோற்கடித்து தமிழரசுக்கட்சிக்கு வெற்றி தேடித்தந்ததன் மூலம் சரியான பாடம் படிப்பித்திருக்கிறார்கள்.

இன்னுமொரு விஷயத்தில் தமிழ்பேசும் மக்கள் தமிழரசுக்கட்சிக்கு பூரணமான ஒத்துழைப்பைத் தந்திருக்கிறார்கள். தமிழ்பேசும் இனத்தின் விடுதலை இயக்கமான தமிழரசுக்கட்சி எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் அவ்வப்போது தடையாக இருந்து வந்த ஈழத் தமிழினத்தின் முப்பெரும் துரோகிகளான ஜீ.ஜீ.பொன்னம்பலம், உடுப்பிட்டி சிவசிதம்பரம், வவுனியா சிவசிதம்பரம், ஆகியோரை இனியும் அவர்கள் தமிழரசுக்கட்சியின் இயக்கங்களுக்கு தடையாக இருக்கக் கூடாது என்று முடிவெடுத்து தேர்தலில் அவர்களை தோற்கடித்து மண் கவ்வச் செய்திருக்கிறார்கள்.

தமிழரிடையே மூன்றே மூன்று தமிழ்க்கட்சிகள் வேகமாகத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டன. தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொன்னம்பலம் தோற்கடிக்கப்பட்டார். சுயாட்சிக் கழகத் தலைவர் நவரத்தினமும் மண் கவ்வினார். தமிழரசுக் கட்சித் தலைவர் தந்தை செல்வா மட்டுமே வென்றார். இதுவும் தமிழரசுக் கட்சிக்கு மக்கள் தந்த ஒரு நல்ல மதிப்பாகும்.

இன்று ஈழத்தமிழ் பேசும் மக்களின் ஆகக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சியாக இத் தேர்தல் மூலம் தமிழரசுக் கட்சியை திரும்பவும் ஆக்கி வைத்திருக்கிறார்கள் தமிழ் மக்கள்.

என்ன...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பில் ஆயிரத்தில் ஒரு பங்கேனும் உழைத்தோமா? உழைக்க வேண்டாமா என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும்; அதுவே நாம் அவருக்குத் தரும் சிறந்த பரிசாகும்.'

## சுதந்திரன் தீர்க்கதரிசனம் பலித்தது!




சுதந்திரன் 27-5-70ல் மேற்கண்ட 'கார்ட்டூனை' வெளியிட்டிருந்தோம். சுதந்திரன் தீர்க்கதரிசனத்துடன் குறிப்பிட்டிருந்தபடி தமிழ் காங்கிரஸ் என்னும் செத்தமாட்டை 'கார்ட்டூனில்' குறிப்பிடப்பட்டுள்ள மூவரும் மே 27ல் குழி தோண்டிப் புதைத்துவிட்டனர். ஆனால் புதைத்த மாட்டை வெளியே எடுத்து உயிர்கொடுக்கும் வேலையில் புதிதாக மூன்று முட்டாள்கள் இறங்கியிருக்கின்றனர். செத்த மாடு செத்த மாடுதான். அதற்கு உயிர் கொடுக்க இனி யாராலும் முடியாது!

இப் பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் மே மாதம் 29-ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.
ஆசிரியர்: கோவை மகேசன்